# வ. சு. செங்கல்வராய பிள்ளை எழுதிய

# மஞ்ஞைப் பாட்டு, வேல் பாட்டு, சேவற் பாட்டு

Source:
மஞ்ஞைப் பாட்டு / வேல் பாட்டு / சேவற் பாட்டு
தணிகைமணி, டாக்டர் வ.சு. செங்கல்வராயப் பிள்ளை,M.A.,D.Litt.
அவர்களால் இயற்றப்பட்டவை.

உ
திருத்தணிகேசன் துணை.
சிவமயம்

முகவுரை

ஸ்ரீல ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகளின் (வள்ளிமலைத் திருப்புகழ் சுவாமிகள்) விருப்பத்தின் படி 1957-ம் ஆண்டில் மஞ்ஞைப் (மயில்) பாட்டும் மதுரைவாசி திருப்புகழ் அலர்மேலம்மையார் விருப்பத்தின்படி வேல் பாட்டும் சேவற் பாட்டும் 1933-ம் ஆண்டில் எனது தந்தையார் தணிகைமணி, டாக்டர் வ.சு. செங்கல்வராயப் பிள்ளை M.A.,D.Litt. அவர்களால் இயற்றப்பட்டவை.

-------------------

உ
கணபதி துணை
திருத்தணிகேசன் துணை

## 1. மஞ்ஞைப் பாட்டு

ஆடு மயிலே! நிர்த்தம் ஆடுமயிலே! - தணிகை
    ஆறுமுக நாதன் வர ஆடு மயிலே!
பாடுமடி யார் பரவ ஆடு மயிலே! - சம்
    பந்தன்வர என்றன் முனம் ஆடுமயிலே! 1

தணிகைமலைத்தேவன்வர ஆடுமயிலே! - தமிழ்
தத்திம் தித்திம் தத்திமென ஆடு மயிலே!
பணியுமெனைக் காத்துவர ஆடுமயிலே! - பரன்
பாலகுகன் ஏறிவர ஆடு மயிலே! 2

நீல மயிலே! மந்த்ர ரூப மயிலே! - நிதம்
நித்தன் அத்தன் ஏறிவரு சித்ர மயிலே!
கோல மயிலே! நீயே ஓல மயிலே! - அண்ட
கூடமுழு தோடினவி சேட மயிலே! 3

துங்க மயிலே! நாகபந்த மயிலே! - சிகைச்
சூட்டு மயிலே கவலை யோட்டு மயிலே!
வெங்கண் மயிலே! கந்தர் தங்கு மயிலே!-அன்பன்
வெற்றி பெற வந்துதவு கொற்ற மயிலே! 4

நேச மயிலே! அரன் பூசை உமையே- திகழ்
நின்னுருவங் கொண்டு செய்தாள் முன்னம் மயிலே!
ஆசை மயிலே! எங்கள் அருணகிரியாம்-அன்பர்
அன்றழைக்க வந்து நின்றாய் ஆதிமயிலே! 5

வாகை மயிலே! மணி நாக மயிலே! - மலை
மாதுதரு நாதனமர் சோதி மயிலே!
தோகை மயிலே! தருமோக மயிலே! -சுகச்
சுத்த நிலை இன்னதெனச் சொல்லு மயிலே! 6

தேவாதி தேவ னென் றாடு மயிலே - திருச்
செங்கொட்டு வேலனென் றாடு மயிலே!
சாவாப்ர சாதந்தந் தாடு மயிலே!-தனத்
தந்தான தானவென் றாடு மயிலே! 7

வேலா விசாக என்றாடு மயிலே! - மலை
வேந்தா குமார என்றாடு மயிலே!
பாலா விநோத என்றாடு மயிலே!-மலர்ப்
பாதா குகேச என்றாடு மயிலே! 8

தத்திமென நிர்த்தமிடு பச்சை மயிலே!-குக
சண்முகனை என்முன் வரப்பண்ணு மயிலே!

சத்திமயில் வஜ்ர மயில் சண்ட மயிலே! - தனித்
தங்க மயில் துங்க மயில் எங்கள் மயிலே! 9

செம்பொன் மயிலே! சித்ரபைம்பொன் மயிலே!-திருச்
செந்தின் மயிலே! பரங் குன்றின் மயிலே!
அம்பொன் மயிலே! எங்கள் நம்பன் மயிலே! - பணி
அஞ்சு மயிலே1 நீயே தஞ்ச மயிலே! 10

வள்ளி மணவாள என்றே ஆடு மயிலே! - வான
மங்கை பங்க துங்க என்றே ஆடு மயிலே!
கொள்ளுநல மின்னதெனக் காட்டு மயிலே! - கோழிக்
கொடிக்கரத்துத் தேவனருள் கூட்டு மயிலே! 11

ஆறு திருப்பதியானென் றாடு மயிலே!-மெய்
யன்பருக்குக் கதியானென் றாடு மயிலே1
வேறுகதி யில்லை யென்றே ஆடு மயிலே!-எங்கள்
வேல வேல வேல என்றே ஆடுமயிலே. 12

அந்த மயிலே! ஆநந்த மயிலே! - சச்சி
தானந்தன் பாட நடம் ஆடு மயிலே!
சந்த மயிலே! எங்கள் கந்தர் மயிலே! - பிர
சண்ட மயிலே! சிகைக் கொண்டை மயிலே! 13

வாசுகி எடுத்துதறு வண்ண மயிலே! - தெய்வ
வள்ளிமலை நாதன்வரப் பண்ணு மயிலே!
ஆசுகவி பாடியுனை ஓதமயிலே! - வரம்
ஆதரித்துத் தந்தருளு நீதி மயிலே! 14

கோடி நமஸ் காரமுனக் காடு மயிலே! - கோடிக்
கோடிநமஸ் காரமுனக் காடு மயிலே!
பாடியுனைப் போற்றுகின்றேன் ஆடு மயிலே! - ஆடிப்
பாடிப் பாடிப்போற்றுகின்றேன் ஆடு மயிலே! 15

எப்போதும் போற்றி செய்வேன் எங்கள் மயிலே! - என்னை
ஏமனிடங் காட்டாதே எங்கள் மயிலே!
முப்போதும் பூஜை செய்வேன் எங்கள் மயிலே! - திரு
முருகனருள் கூட்டிவைப்பாய் எங்கள் மயிலே! 16

**************

வேலு மயிலுந் துணை
உ

## வேல் பாட்டு

தானன தானன
தானன தானன தானதனா
தானன தானன
தானன தானன தான தனா

கலையி லே உச்சி வேளையிலே கடி மாலையிலே
வேலயி லே என்று செப்பிடத் தீருநம் வெவ்வினையே. 1

சாத்திர மோதிலென் தீர்த்தங்க ளாடிலென் தானறுமோ?
தோத்திர மோதிநம் வேலவர் வேலைத் தொழார் வினையே. 2

வேலே எனத்துதி யாதே மனத்துயர் வேதனையி
னாலே தினத்தினம் ஏனோ அலமரல் ஞாலத்துளீர்? 3

வேலு மயிலு நினைந்தவர் தந்துயர் வேரறுமே
பாலென் நிறக்கதி ரோன்முனம் நின்ற பனியெனவே. 4

வீரவேல் தாரைவேல் வெற்றிவேல் கொற்றவேல் மின்னயில் வேல்
தீரவேல் என்று தினமும் பணிந்திடத் தீங்கறுமே. 5

எங்கள்வேல் தங்கவேல் துங்கவேல் செங்கைவேல் என்றிடவே
எங்குமி லாததோர் இன்பநம் பாலதாம் இஃதறிமின். 6

குன்ற மெறிந்தவேல் என்றும் பெருந்துணை கும்பிடுவோம்
இன்றுநம் வெவ்வினைக் குன்ற மெறிந்திட இன் துணையாம். 7

குன்றஞ்செய் மாயையில் வீரரைக் காத்தவேல் கொட்கும்வினைக்
குன்றஞ்செய் மாயையில் நின்றெனைக் காத்திடும் கூரிலைவேல். 8

சாகரத் தேநின்று வீரரை மீட்டவேல் சார்பிறவிச்
சாகரத் தேநின்றும் என்னையு மீட்டிடுந் தங்க வைவேல். 9

வெற்றிவேல் கந்தனே என்று தனைப்பணி வீரவாகுக்
குற்றது பற்றென மற்றெனக் கும்மருள் ஒண்சுடர்வேல். 10

பழுதிலா அன்பர்தம் நாவிற் பொறிப்பப் பலனளிக்கும்
எழுதுகோ லாக அமைந்திடும்எங்கள் இறைவன் கைவேல். 11

உண்ணாடி நிற்பவர்க் கென்றுந் துணைசெய் ஒருவருக்கே
கண்ணாடி யிற்றடங் காண்பதற் குற்ற கருவி செவ்வேல். 12

உக்கிர பாண்டியற் காகக் கடலை உறிஞ்ச வைவேல்
நிக்கிர கஞ்செயும் என்றன் பவமெனும் நீள்கடலை. 13

வள்ளி விழிக்கு நிகரென லாகும்வை வேலெனவே
உள்ளி உரைத்த உவமைப் பொருளை உணர்பவர் யார்? 14

தேவர் சிறையும் பிறவிச் சிறையுஞ் சிதைக்கும் வைவேல்
மூவர் பணிதணி காசல மேவு முதல்வர் கைவேல். 15

கீரனைக் காத்தவேல் சூரனைத் தீர்த்தவேல் கிட்டிவரு
மாரனைத் தீத்தவர் மைந்தர் திருக்கைவேல் வஜ்ர வைவேல். 16

ஞாயி றொளிவட வாக்னி ஒளியுடன் நண்ணுநிலா
பாயு மொளியும் ஒளிப்ப ஒளிருங்க்ரு பாகரன்வேல். 17

ஏமன் வருஞ்சம யத்து முக்கண்ணர் இணையடிபோற்
சேமந் தருவது வேலென் றுணர்ந்ததைச் செப்பிடுவோம். 18

வாட்டத்தி லே மன ஏக்கத்தி லே தனி மார்க்கத்திலே
நாட்டத்தி லே அயில் நாடப் பெருந்துணை நண்ணிடுமே. 19

சந்தப் புகழ்சொல் அருண கிரிக்குச் சதா துணைவேல்
இந்தப் புவியிலென் றேயறிந் தேயதை ஏத்திடுவோம். 20

ஆனந்த மாகத் திருப்புகழ் பாடியும் ஆடு சச்சி
தானந்தர் நெஞ்சிற் குடிகொண் டிருக்குமெம் அண்ணல் கைவேல். 21

சோதிவேல் நீதிவேல் என்று திருத்தணிச் சுப்ரமண்ய
ஆதிவேல் தன்னைநாம் ஆசையொ டே நிதம் அன்புசெய் வோம். 22

சத்திவேல் சத்திவேல் சத்திவேல் என்று சதா உரைத்தே
பத்தியோ டேத்தப் பரகதி நிச்சயம் பாருளீரே. 23

வேலுக் கபயஞ்செவ் வேலுக் கபயம் விளங்குமயில்
வேலுக் கபயமென் றேதுதி செய்து வினையறுப்பாம். 24

வேலு மயிலுஞ் சேவலுந் துணை.

---------------------------------------------------------

## வேற் பாட்டு

ஆனைமுக வற்கிளைய வள்ளல் கரச்சேவல்!
    அடியார்வினை பொடிபடுத்தி அருள் சுரக்குஞ் சேவல்!
தேனைவென்ற திருப்புகழ் சொல் அருணகிரி போற்றுஞ்
    செச்சைமுடி யுச்சியொளிர் தெய்வவுருச் சேவல்!
மானைவென்ற மடநோக்கி வள்ளியைப் போல் வலிய
    மகிழ்ச்சியுடன் கிரிராஜர் கைப்பிடித்த சேவல்.
ஊனைவளர் அஞ்ஞானம் உடையவர்கள் காணா
    ஒண்பவளச் செஞ்சடிலர் மைந்தர் திருச்சேவல். 1

சேவலென்றுங் கோழியென்றுந் தணிகை மலைத்தேவர்
    திருக்கரத்து வாரணமே என்றுமுனைப் பொற்றி.
ஆவலுடன் காலை நிதம் நீகூவுந் தோறும்
    அப்பமுரு கைய என ஆர்வமுடன் எழுந்தே.
தேவரிடர் தீர்த்த குக ஷண்முகனார் பாதஞ்
    சிந்தனைசெய் நெஞ்சமெனக் கேனருள மாட்டாய்?
கூவ இருள் ஒழிகின்ற சூக்ஷுமத்தைக் கண்டேன்
    கூறியுனைப் புகழாமல் இனியிருக்க மாட்டேன். 2

காலே ஆயுதமாகப் படைத்திடு செஞ்சேவல்!
    கர்மவினைக் குன்றிடித்தே எனக்கருள வேண்டும்;
நாலேயாம் வேதங்கள் பாதங்கள் போற்றும்
    நம்பர் திருவடிமறவா நெஞ்சருள வேண்டும்.
தாலேலோ எனப் பாடித் தாலாட்டும் அறுவர்
    தந்தமுலை யுண்டருளும் மைந்த எனக் கூறி.

மாலேயாந் தேவருக்கு மேலாய வேலோன்
　மலரடிக்கே ஆட்செய்யுந் தொண்டருள வேண்டும். 3

காரணந்தன் காரியந்தன் சகலமுமே தானாங்
　கந்தபிரான் எந்தைபிரான் திருக்கரத்துச் சேவல்!
வாரணத்து மங்கைமண வாளர்தணி கேசர்
　வாராய் பேதாயெனவே எனையாள்வா ரோசொல்!
ஆரணத்தின் முடியிலுறை குருநாதர் செந்தில்
　அதிபரவர் அடியேன்முன் வருநாளு முண்டோ?
பூரணத்திற் பூரணமாம் மெய்ப்பொருளைக் காட்டிப்
　புலப்படவே எனக்கருளும் நாளுமுள தோசொல்! 4

கொக்கறுகோ கோ வென்றே உண்மையெடுத் தோதுங்
　குக்குடமே! சிற்சுகமே! பிறவியிருள் நீங்கிச்
சிக்கறவே மெய்ஞ்ஞான சூரியனாஞ் சேயோன்
　தெரிசனத்தை யான்பெறவே வரவொருகாற் கூவாய்!
தக்கதறி யாதுன்றன் தேகருசி கண்டே
　தமதுவயிற் றடக்குகின்றார் மாந்தர்பல ரந்தோ
பக்குவத்தைக் கண்டோருள் நாதநிலை கண்டே
　பரவிநெஞ்சத் தடக்கியுனைப் பேரின்பஞ் சார்வார். 5

கோழியென்று பாடியுனைக் கும்பிட்டேன் கண்டாய்
　குமரேசர் தணிகேசர் என்முன் வரக் கூவாய்!
வாழியென்று வாழ்த்தியுனைப் போற்றுகின்றேன் கண்டாய்
　வள்ளிமலைச் செல்வரவர் என்முன்வரக் கூவாய்!
காழியன் கைச் சேவலென்றே துதிக்கின்றேன் கண்டாய்
　கதிர்வேலர் மயிலேறி என்முன்வரக் கூவாய்!
ஏழிசையின் பயனே யென் றேத்துகின்றேன் கண்டாய்
　எங்களுயிர்த் தலைவரவர் என்முன்வரக் கூவாய்! 6

உடுகொறித்த உனதுபிர தாபத்தைக் கூறி
　ஓயாது வாயார உன் புகழைப் பாடேன்!
மடுக்கணொரு யானைக்கு வந்துதவு மாயோன்
　மருமகனார் செங்கரத்தில் தங்கியொளிர் சேவல்!
தடுக்கவரி தாமிந்த வினைப்பவமாஞ் சுழியில்
　தடுமாறித் தவிக்கின்ற என்னையுங்கண் பார்த்தே.
எடுகவுனக் கரிதோசொல் எந்தைமுரு கேசர்
　எழிற்கரத்தில் விளங்குகின்ற இன்பவுருச் சேவல்! 7

அங்கமெலா முருகநவ நவமான இசையில்
அமைந்தருண கிரியார்சொல் திருப்புகழை நாளும்
பங்கமகற் றட்யார்கள் இன்பமுடன் கேட்கப்
பாடுசச்சி தாநந்தன் மனக்கோயி லதன்கண்
துங்கமுடன் பொலிகின்ற செஞ்சூட்டுச் சேவல்!
சூலமுடன் தண்டேந்தி நமன்வருங்கா லத்தே
இங்குளன்யான் அஞ்சாதே எனக்கூறி என்முன்
எங்கள்துரை சாமிதணி கேசர்வரக் கூவாய். 8

*************

வேலு மயிலும் சேவலும் துணை.

உ

கணபதி துணை

# வள்ளி கல்யாணம்

## (கும்மிப் பாட்டு)

வள்ளி யழகினைக் கேட்டாண்டி - அவள்
மையல் வலையிலே வீழ்ந்தாண்டி;

கள்ள வேடத்தைப் புனைந்தாண்டி-வேடக்
கன்னியை உன்னியே நொந்தாண்டி. 1

நாடுந் தணிகையை விட்டாண்டி-நல்ல
நாளாம் இதென்றே நடந்தாண்டி;

காடும் புனமும் கடந்தாண்டி-வள்ளிக்
காதல் இழுக்க விரைந்தாண்டி. 2

வள்ளி மலைக்கவன் வந்தாண்டி-எங்கள்
வள்ளியை நாடியே வந்தாண்டி;

மெள்ளவே வேடனாய் நின்றாண்டி-நல்ல
வேடிக்கைப் பேச்சுக்கள் சொன்னாண்டி. 3

வளைவிற்குஞ் செட்டியாய் வந்தாண்டி-வள்ளி
வரிவளைக் கையையும் தொட்டாண்டி;

இளைத்தவன் போலவே நின்றாண்டி-வள்ளி
ஏனெனக் கேட்பாளென் றிருந்தாண்டி. 4

பேசொரு பேச்செனெ இரந்தாண்டி-அவள்
பேச்சுக்கு வாயூறி நின்றாண்டி;

கூசுதல் இல்லாது பார்த்தாண்டி-கண்ணாற்
கோலத்தை மொண்டு குடித்தாண்டி. 5

வேடர் தலைவனைக் கண்டாண்டி-உயர்
வேங்கை மரமதாய் நின்றாண்டி;

ஆடல் பலபல செய்தாண்டி-வள்ளி
அன்பினைச் சோதிக்க வந்தாண்டி. 6

தோன்றிய நம்பிமுன் சென்றாண்டி-நல்ல
தொண்டு கிழவனாய் நின்றாண்டி;

ஊன்றிய கோலொடு சென்றாண்டி-சுபம்
ஓதியே நீறும் அளித்தாண்டி. 7

குமரியி லாடவே வந்தேன்நான்-கோலக்
குறவர் தலைவனே என்றாண்டி;

அமருவன் வேடிச்சி காவலனாய்-ஐய
அவளொடும் என்றுமே என்றாண்டி. 8

தேனும் தினைமாவும் தின்றாண்டி-வள்ளி
திருக்கையில் வாங்கியே தின்றாண்டி;

மீனும் மருள்கின்ற கண்ணாளே-ஐயோ!
விக்கல் எடுக்குதே என்றாண்டி. 9

தாகத்தைத் தாங்கேனே என்றாண்டி-கண்ணே!
தாராய் சுனைத்தண்ணீர் என்றாண்டி;

மோகத்தை உள்ளுக்குள் வைத்தாண்டி-மெல்ல
மோசத்தைச் செய்ய நினைத்தாண்டி. 10

சுனைநீரை யுண்டு சுகித்தாண்டி-ஆஹா!
சுதினம் ஈதென்றே சொன்னாண்டி;

உனைநீயே ஒப்பாயென் றுரைத்தாண்டி-வள்ளீ !
உள்ளதைக் கேளென் றுரைத்தாண்டி. 11

தாகத்தைத் தீர்த்த தயாநிதிநீ-என்றன்
தாபமோ சொல்லுக் கடங்காதென்;

மோகத்தைத் தீர்த்தருள் என்றாண்டி-முழு
மோசக் கிழவனாய் வந்தாண்டி. 12

சூதினைக் கண்டதும் ஓடினளே-வள்ளி
"சுப்ரம்மண் யாதுணை" என்றனளே;

மாதினை வந்து மடக்கும்ஐயா!-எங்கள்
வாரண ராஜரே என்றழைத்தார்.< 13

ஆனையைக் கண்டு நடுநடுங்கி-அவள்
ஐயன் கிழவனை வந்தணைந்தாள்;

மானை யடைந்து மகிழ்ந்தாண்டி-எங்கள்
மால்மரு கன்தணி கேசனுமே. 14

தணிகை மலையை அடைந்தாண்டி-வள்ளித்
தாயுடன் அங்கே தரித்தாண்டி;

பணிய வினையொழித் தருள்வாண்டி-பாடிப்
பரவுவார்க் கின்பம் அளிப்பாண்டி. 15

மந்திரம் ஆவதும் அவன்தாண்டி-நல்ல
மாமருந் தாவதும் அவன்தாண்டி;

தந்திரம் ஆவதும் அவன்தாண்டி-சுத்த
சத்தியம் ஆவதும் அவன்தாண்டி 16

நானெனும் ஆணவம் விட்டார்க்கே-அவன்
நாளும் பணிவிடை செய்வாண்டி;

கானெனுங் கூந்தல் படைத்தவள்ளி-காலிற்
காதலாய் வீழ்ந்து பணிந்தாண்டி. 17

தன்னை மறந்துநீ பத்திசெயின்-உன்னைத்
தாவி யணைக்க வருவாண்டி;

அன்னையும் அத்தனும் ஆவாண்டி-உன்றன்
ஆசையெலாம் பூர்த்தி செய்வாண்டி. 18

ஓங்கிய வானத்துத் தேவரெலாம்-நாளும்
ஓலமிட் டாலுமே வாராண்டி;

காங்கேயா கந்தா எனஉருகில்-உன்றன்
காட்சிக் கெளியனாய் நிற்பாண்டி. 19

திருப்புகழ்ச் சாமியை ஆண்டாண்டி-அவர்
செய்தவங் கண்டு மகிழ்ந்தாண்டி;

விருப்புடன் பாடும் அடியவர்க்கே-அவர்
வேண்டும் வரங்களைத் தருவாண்டி. 20

-------------------

உ
கணபதி துணை
சிவமயம்
திருத்தணிகேசர் துணை

# வள்ளி-கிழவர் வாக்கு வாதம்.

வள்ளிமலைத் திருப்புகழ்ச் சுவாமிகள் விருப்பத்தின்படி

வா.சு.செங்கல்வராய பிள்ளை, M.A., இயற்றியது.

IV- 3500.

மார்ச் 1965

(பதிப்புரிமை ஆசிரியருக்கே)

------------------------------

முதற் பதிப்பின் முகவுரை

திருத்தணிகேசரையே உளத்தில் தரித்து அவரையே மணம் புரிவேன் என்றிருந்த வள்ளி நாயகியின் முன்பு முருகர் கிழவடிவு கொண்டு தோன்றிச் சிவபிரானையும்

சிவகுமாரனையும் இழிவு படுத்துவது போலப் பேசி வள்ளியம்மையின் திடபுத்தியையும் அசையாப் பத்தியையும் உலகுக்கு வெளிப்படுத்தினது போலக் கற்பனையாக அமைக்கப்பட்டன. இவ் வாக்கு வாதப்பாக்கள். பிழையுளதேற் பெரியோர் பொறுத்திடுக.

சென்னை-1}
20-11-1928. } வா.சு.செ

----------

உ

## வள்ளி-கிழவர் வாக்கு வாதம்.

கிழவர் :
செந்திருவு நாணுமெழிற் சித்திர நிறக்கிளியே!
எந்தனுரை சிந்தை கொளச் சற்றிசைதி நீ.

வள்ளி : அறிவுநிறை பெரியருரை ஆக்கமொழி ஆகலினால்
சிறிதளவு மில்லை தடை செப்பியருள்வீர். 1

கிழவர் :
தேய்மதியன் சேயவனைத் தோயுமெனப் பித்தமிது
செம்மையல மெய்ம்மையிது தேன் மொழியளே!

வள்ளி :
தேய்மதியம் நாதர்முடி சேர்ந்தகதை நீருணரில்
செம்மைநெறி என்நெறியென் றேயுணர்விரே. 2

கிழவர் :
குலமிலியாய்த் திக்கற்று நின்றசிவன் ஈன்றவனைக்
கொழுநனென நாடுவது பழுது பழுதே.

வள்ளி:
குலங்கடந்த குமரவடி வேலவனைக் கூடுதலால்
மலங்கடந்து மாட்சியுறும் ஆட்சி பெறுவேன். 3

கிழவர் :
வீடுசுடு காடுகுணம் ஒன்றுமிலி தன்மகனை
நாடுதலின் என்னசுகம்? நங்கை யுனக்கே.

வள்ளி :

வெய்யவினை சுட்ட இடம் மோக்ஷஇடம்; முக்குணமும்

நையுநிலை ஞானநிலை நன்குணர் விரே. 4

கிழவர் :

மாமனவன் தலைதுணித்தான் மைந்தனிவன் என் றுணர்ந்துன்
மாலகற்றிச் சாந்திபெறு மங்கை யரசீ!

வள்ளி :

மாமனுக்குத் தண்டமுறை ஞானம்வரச் செய்ம்முதலின்

மைந்தனுக்கென் சிந்தைசெலல் என்ன தவமோ. 5

கிழவர் :

தேவர்பலர் தாமிருக்க மானிடனின் மைந்தனையே
நீவிரும்பி நிற்றலொரு ந்யாய மிலையே.

வள்ளி :

மானிடத்தில் வைத்துமலை மானிடத்தில் வைத்தவர் சேய்

மானிடத்தில் வந்தஎனை விட்டகல்வரோ! 6

கிழவர் :

பாதியுடல் போனஒரு மாதுதரு சேயினுக்கோ
நீதிகைத்துக் காதலுறல் நீதி மயிலே!

வள்ளி:

சத்திசிவ மொத்துவரு சத்திவடி வேலரிடம்

புத்திசெலல் என்னுடைய பூர்வ புண்ணியம். 7

கிழவர் :

பெருவயிற்றுப் பிள்ளை தனக் கண்ணனெனக் கொண்டவன்தன்

உருவதனை எண்ணிமனம் ஓய்வ தென்னையோ?

வள்ளி :

பெருவயிறன் பெருவரத்தன் எண்ணியதைக் கூட்டுவித்துத்

தருவனவன் தன்னுடைய தயவு முக்கியம். 8

கிழவர் :

மாமாய மாலவனை மாமனெனக் கொண்டவனை
நீமாது நேடிநிற்றல் நீதி யல்லவே.

வள்ளி :
மால்தருவன் மாயனென்றால் வரையெறிந்தான் குரை கழற்கே
மால்தருதி ஐயஎன அவரை வேண்டுவேன். 9

கிழவர் :
காற்றிலகப் பட்டுமடு வாயிலுறு கான்முளையைக்
காதலுறல் நீதியல கான மயிலே!

வள்ளி :
காற்றுமுத லாக வரு பூதவுயி ரானவர் தங்
காதல்பெறல் மாதவ மென் றேயறிதிரே. 10

கிழவர் :
தீயிலகப் பட்டுநதி தன்னிலலை யுண்டஒரு
சேயிடை விருப்பமுறல் தீய தையகோ!

வள்ளி :
தீயுமுடல் தீயவரு செந்நிறத்துச் சேயில் மனம்
பாயவரு பாக்கியமே பாக்கியமதாம். 11

கிழவர் :
கௌரியெனுந் தாயிருக்க வேற்றுமுலை யுண்டவன்றன்
சௌரியத்தை நீபுகழ்தல் தக்க தல்லவே!

வள்ளி :
பத்தியொடு போற்றுபவர் யாவருக்குந் தான் குழந்தை
யொத்துவரு வாரவருக் கொப்பு முளரோ! 12

கிழவர் :
குருவினுக்கு மிஞ்சிவரு சீடனெனப் பேர்படைத்த
குமரனைநீ நாடுவது கொடிது கொடிதே.

வள்ளி :
குருவிலாத தேசிகருங் குருவெனவே போற்ற நின்ற
குருமணியைக் கூடிடுதல் என்ன புண்ணியம்! 13

கிழவர் :
குன்றமலைந் தேதிரிந்துங் கோழிபிடித் தேதிரியுங்
குளவனைநீ யுளம்வரித்தல் பிழை பிழையதே.

வள்ளி :
குன்றம்வினைக் குன்ற மென்றுங் கோழிசிவ ஞானநிலை
என்றுமுண்மை நாமுணரில் ஏது பிழையே? 14

கிழவர் :
முன்னமொரு மாங் கனிக்கா வெம்பியுளம் நொந்தவனை
உன்னிமனம் நீவருந்தல் உசித மல்லவே.

வள்ளி :
காயறியாக் கனியாமக் கனிபெறநான் கண்ணி நிற்றல்
தாயறியாக் கருவாவார் தாமறிவரே. 15

கிழவர் :
ஏதேது யான்சொலினும் கொக்கறுத்த வேடனுரு
ஏந்திழையே நீவிழைதல் என்ன விந்தையோ !

வள்ளி :
சூதேது மில்லைஐய ! வேடர்மகள் வேடனையே
சூழுமிதன் உண்மைதனை நீருணர் விரே. 16

-----------

வேலு மயிலுஞ் சேவலுந் துணை
உ

## குறிப்புரை

1. செந்திரு - லக்ஷ்மி. இசைதி - ஒத்துக்கொள். ஆக்க மொழி - ஆக்கத்தை (சகல செல்வங்களையும்) தரக்கூடிய மொழி

2. தேய்மதி- குறையும் அறிவு; தேய்கின்ற நிலா (இரு பொருள்) தேய்மதி நாதர் முடி சேர்ந்த கதை - தக்கனார் சாபமுற்றுத் தேய்ந்த மதியை ஈசர் தமது முடியிற் சேர்த்து மீண்டும் வளர அருளியது.

5. மாமன் - தக்கன். தலை துணித்தான் - சிவன். தண்ட முறையால் (தண்டித்து) ஞானம் வரச்செய்த முதல்- சிவன்.

6. மான் இடன் - இடது கையில் மானைத் தரித்தவன், நரன் என இரு பொருள். மான் +இடத்தில் வைத்து -இடது கையில் மானைத் தரித்து. மலை மான் - பார்வதி. இடத்தில் வைத்தவர் - இடது பாகத்தில் வைத்தவர். மானிடத்தில் வந்த எனை - மான் வயிற்றில் வந்த என்னை.

7. பாதியுடல் போன ஒரு மாது - பார்வதி; வலதுபாகம் சிவனிடத்துக் கலந்தமையால்.

9. வரை யெறிந்தான்- கிரௌஞ்ச மலையைப் பிளந்த குமரன். மால்தருதி- பற்றைக் கொடு.

10. காற்றில் அகப்பட்டு - வாயுவின் கையில் ஏந்தப்பட்டு.

"வாயுவைக்கொண் டேகுதியென்
றெம்மான் கொடுத்தளிப்ப"

(கந்தர் கலிவெண்பா)

மடு - சரவண மடு. கான் முளை - குழந்தை. காற்று முதற் பூதம்- பஞ்ச பூதங்கள்.

11. தீயிலகப்பட்டு - அக்கினி கையால் ஏந்தப்பட்டு.

"அக்நிகர மீதிற் ப்ரபாகரனும்" (திருவகுப்பு)

தீயதையகோ - தீயது + ஐயகோ, ஐயகோ - ஐயோ
தீயுமுடல் தீய - அக்கினியுங் கருக. செந்நிறத்துச் சேய் - முருகர். மனம் பாயவரு பாக்கியம் - மனம் பாய்ந்து செல்லும் பாக்கியம்.

12. வேற்றுமுலை - கார்த் திகை மாதர் முலை.

10, 11, 12, மேற்கோள்:

"காற்றிற் றள்ளுண்டு நெருப்
பினிற் சூடுண்டு கங்கை
யாற்றிற் றாக்குண்டு சரவணம்
புக்கலை யுண்டு
வேற்றுப் பேர்முலை யுண்டழு
தேவிளையாடும்

நேற்றைப் பாலனை யோபரம்
பொருளென நினைந்தாய்"

(கந்தபுரா. சூர அமைச்சியல். (144)

13. குருவிலாத தேசிகர் - சிவ பிரான் - "குருவிலாதவர்" - திருப்புகழ்-637.

14. குன்றமலைந்தே - கிரவுஞ்ச மலையைப் பிளந்தே, மலைகளில் அலைந்தே - (இரு பொருள்). குளவன் - குளத்தில் உற்பவித்தவன் - முருகன்;

(சிவபிரானது) நெற்றிக் கண்ணில் உதித்தவன் எனினுமாம்.

15. காயறியாக் கனி - காய் நிலையறியாக் கனி. தாயறியாக் கரு ஆவார் - தாயறியா - தாயிலாக் கரு ஆகின்றவர் - கடவுள்.

"காயறியாச் செழுங்கனியே
கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவிலிருந்
தமுதூட்டுந் தாய்த்துணையே"

(திருக்குற்றாலப் புராணம்.)

16. கொக்கறுத்த வேடனுரு- (கொக்கு) மாமரத்தை (சூரனை) அறுத்த வேள் தன் உரு - மாமரத்தையட்ட செவ்வேளின் உரு. வேடர்மகள் வேடனையே சூழும் - வேட்டுவ ஜாதிப்பெண் வேட்டுவ ஜாதி ஆணையே (வேடனையே) விரும்பும். வேள்- தனையே சூழும்- செவ்வேளையே விரும்பும். (இரு பொருள்).

--------------------------------------------

உ
கணபதி துணை
திருத்தணிகேசன் துணை

## சிவபராக்ரம போற்றி அகவல்

திருச்சிற்றம்பலம்

### 1. அட்டவீரம்:

அட்டவீரத் தலங்கள் முறையே: கண்டியூர், திருக்கோவலூர், திரு அதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, வழுவூர், குறுக்கை திருக்கடவூர்.

அயன்தலை அறுத்த ஆதி போற்றி
அந்தகற் செற்ற அரசே போற்றி
திரிபுரம் எரித்த சேவக போற்றி
தக்கன் வேள்வி தகர்த்தாய் போற்றி
சலந்தரன் வலந்தனைச் சாய்த்தனை போற்றி.
களிறு பிளிறக் கண்டனை போற்றி
காமனை எரித்த கண்ணுதல் போற்றி
காலனை உதைத்த கடவுள் போற்றி.

### 2. பிறவீரம்:

சேற்கண் இடந்த சேவக போற்றி
ஆமையோ டணிந்த அண்ணலே போற்றி
ஏனத் தெயிறுபூண் எந்தாய் போற்றி
சிங்க வுரிபுனை சேவக போற்றி
வாமனற் செற்ற வரத போற்றி
குரண்டா சுரனைக் குலைத்தனை போற்றி
காளியை அடக்கிய கர்த்தனே போற்றி
கரமிரு பத்தாற் கயிலையை அசைத்த
இலங்கை மன்னன் இருபது தோளிறக்
கலங்க ஊன்றலும் நலங்கெழு சிந்தையன்.
கீதம் பாடக் கிருபைபா லித்து
நாளொடு வாள்தரு நாத போற்றி

### 3. தக்கன் யாகம்:

எச்சனை வீட்டிய என்பொனே போற்றி
இந்திரன் தோள்முறி எந்தாய் போற்றி
சூரியன் கண்பல் தொலைத்தனை போற்றி
குயில்சிற கரிந்த கொற்றவ போற்றி
திங்களைக் காற்கீழ்த் தேய்த்தனை போற்றி
கருடன் சிறகைக் கழித்தனை போற்றி
நாமகள் நாசி கொய்தனை போற்றி
அங்கியின் கரத்தை அட்டனை போற்றி.

4. தாருகாவனம்:

அரவணி பூண்டஎன் அன்பே போற்றி
மான்மழு ஏந்திய வானவ போற்றி
அனலெரி ஏந்துகை அத்தா போற்றி
பூதர் வெண்டலை துடியைனப் புக்கவை
ஆற்றல் அடங்க அடக்கினை போற்றி
முயலகன் உரமிதி மொய்ம்பா போற்றி
புலித்தோல் அரைக்கணி பூசுர போற்றி

5. பிற பெருமைகள்-அருட்டிறங்கள்:

இருவர்க் கரியனாய் இருந்தாய் போற்றி
கங்கை சூடிய கடவுள் போற்றி
பிறையணி சடையெம் பெருமான் போற்றி
விடமணி கண்டநின் மெய்யடி போற்றி
கல்லால் நீழலில் நல்லார் நால்வருக்
கரும்பொருள் உரைத்த பெரும்பொருள் போற்றி
விற்றிறல் விஜயற் கற்றைநாள் பாசு
பதங்கொடுத் தாண்ட சிதம்பர போற்றி.
ஒருபூக் குறைந்ததென் றொருகண் இடந்தங்
கருச்சனை புரிந்த அரிக்குச் சக்கரம்
தந்த பெருந்தகைத் தாணுவே போற்றி
வலம்புரம் அதனில் வலம்புரிச் சங்கம்
மாலவற் களித்த வரதனே போற்றி
வாஞ்சையாற் கேட்ட பாஞ்சசன் னியத்தைத்
தலைச்சங் காட்டில் தாமரைக் கண்ணன்
வழிபட அளித்த வள்ளலே போற்றி
வெள்ளங் காட்டி வெருட்டி உமையவள்

தழுவக் குழைந்த தயாபர போற்றி
நச்சர வாட்டிய நம்பா போற்றி
மறைவனத் தொருநாள் மணநெய் கவர்ந்த
எலியைமா வலியா யிருத்தினை போற்றி
இதஞ்சலிப் பெய்தாப் பதஞ்சலி ஏத்த
நிதம்புரி நடன நீதனே போற்றி
புலிக்காலண்ணல் போற்றத் திருநடம்
சலிக்கா மற்புரி சதாசிவ போற்றி
பாடுவார் இருவரைத் தோடதார் செவியிற்
பீடுடன் கொண்ட பிரானே போற்றி.

6. திருவிளையாடல் 64:

இந்திரன் பழியொழி இறைவ போற்றி
ஐரா வதத்துக் கருளினை போற்றி
மதுரை நகரை வகுத்தனை போற்றி
தடாதகை வர அருள் தந்தனை போற்றி
அரசியை மணந்த அரசே போற்றி
*வெள்ளியம் பலத்தில் துள்ளினை போற்றி
குறளனுக் கரும்பசி கொடுத்தனை போற்றி
அன்னக் குழியவற் களித்தவன் தாகம் ---
'வெள்ளியம் பலத்துட் டுள்ளிய பெருமான்' - கல்லாடம்

தீர்த்த வைகையால் தீர்த்தனை போற்றி.
எழுகடல் அழைத்த இறைவபோற்றி
மாமிமகிழ மாமனை அழைத்த
சாமிபோற்றி சதாசிவபோற்றி
உக்கிரகுமரனை உதவினை போற்றி
வேல்வளை செண்டவை விருப்புடன் அளித்துக்
குமரற் காத்த குழக போற்றி
கடலது சுவறக் காத்தனை போற்றி
இந்திரன் முடிவளை எற்ற இயற்றின
சுந்தரச் சோதிநின் துணைப்பதம் போற்றி
செண்டடி பெற்றுத் திருவார் மேரு
மண்டுபொன் தரும்படி வைத்தனை போற்றி
மறைப்பொருள் விளக்கின வானவ போற்றி (16)

மரமணி விற்ற தூமணி போற்றி
வருணன் நாண வாரிதி வற்றக்

காருத வுந்தனிக் கடவுள் போற்றி
நாடழி யாதுகார் நான்கும் மாடக்
கூடல் வகுக்கக் குறித்தனை போற்றி
எல்லாம் வல்ல சித்த ரெனவே

உல்லாச மாக உலவினை போற்றி
கல்லானை தின்னக் கரும்பளித் தன்று
வல்லான் எனவே வயங்கினை போற்றி
யானை எய்தகோ மானே போற்றி
விருத்த குமார பால னெனவிழை

ஆடல் புரிந்த அரசே போற்றி

மாறியாடின மணியே போற்றி (24)
பழியஞ்சி நின்ற பரசிவ போற்றி
மாபா விக்கருள் பூபா போற்றி
அங்கம் வெட்டின துங்க போற்றி

நாகம் எய்த நாயக போற்றி
மாயப் பசுவை மாய்த்தனை போற்றி
மெய்க்காட் டிட்ட மெய்ய போற்றி
உலவாக் கிழிதரும் உலப்பிலி போற்றி

வளையல் விற்ற மணாளா போற்றி (32)

அட்ட சித்திகள் அளித்தனை போற்றி
விடையின் பொறிபொறி சடைய போற்றி
தண்ணீர்ப் பந்தல் சமைத்தனை போற்றி
ரசவா தஞ்செய் ரஞ்சித போற்றி
சோழன் மடுவிழச் சுழ்ந்தனை போற்றி

உலவாக் கோட்டை உதவினை போற்றி
மாமனா வந்து வழக்கது வென்ற
தூமனா உன்றன் துணையடி போற்றி
வரகுணன் மகிழ மாசிவ லோகக்

காட்சியை யளித்த கடவுள் போற்றி (40)

விறகினை விற்ற விரக போற்றி
திருமுகங் கொடுத்த திருவ போற்றி
பலகை யிட்ட பரம போற்றி
இசைவாது வென்ற இன்ப போற்றி
பன்றிக் குட்டிகள் பருக பாலினைத்

தாயா யளித்த தயாபர போற்றி
ஏனமுந் நான்கும் இறையமைச் சாக
மீனவற் களித்த வானவ போற்றி
கரிக்குரு விக்குக் கருணை காட்டிய
கண்ணியங் கொண்ட புண்ணிய போற்றி

நாரைக்கு வீடு நல்கினை போற்றி 48

ஆலவா யெல்லை அமைத்தனை போற்றி
சுந்தரப் பேரம் பெய்த சோம
சுந்தர நீல கந்தர போற்றி
சங்கப் பலகை தந்தனை போற்றி

தருமி மணஞ்செய் அருமைய பொற்கிழி
அளிக்குங் கவியொன் றருளினை போற்றி
கீர னைக்கரை யேற்றிய கீர்த்தி
அரவனே ஆரா அமுதனே போற்றி
இலக்கணம் கீரற் ககத்தியர் மூலம்

நலக்க அளித்த நாயக போற்றி
சங்கப் புலவர்தம் சங்கையை ஊமன்
தீர்க்க வைத்த திருவருள் போற்றி
இடைக்கா டன்கொள் பிணக்குட னேக

அவன்பின் சென்ற சிவனே போற்றி (56)

பரதர்கோன் மகள்மணம் பண் ணுதற்கன்று
வலைவீ சியதிறம் வாய்ந்தவ போற்றி
வாதவூ ரர்கருப் போதக போற்றி
நரிபரி யாக்கிய நாடக போற்றி
பரிநரி யாக்கிய பக்குவ போற்றி

பிட்டமு துக்கடி பட்டவ போற்றி
மீனவன் சுரந்தவிர் ஞானனே போற்றி
சமண்கழு வேற்றிய சதுர போற்றி
வன்னியுங் கிணறும் லிங்கமும் வந்து

சான்று பகரச் சமைத்தனை போற்றி (64)

## 7. பிற ஆடல்கள்:

கவிஞராய்ப் போந்த காரியார் நாரியார்
தடைபட வழிமறித் திடையனாய் நின்றவர்
பாப்பகுந் திட்ட பரமனே போற்றி
நலிவுறு புல்வாய் நனிமகிழ் வெய்தப்
புலிமுலை யளித்த புண்ணிய போற்றி

சாயா அன்பொடு தாயாய் வந்து
மருத்துவம் பார்த்த கருத்தனே போற்றி
ஐயா றதனிற் சைவா போற்றி
வழித்துணை நின்ற வள்ளால் போற்றி
தாடகைக் காத்தலை சாய்த்தனை போற்றி

8. அறுபத்து மூவரை ஆண்டது:

திருநீல கண்டர்க் கொருநீதி காட்டிய
கருநீல கண்டநின் கழலிணை போற்றி
இல்லையென் னாத இயற்பகை இல்லை
ஈயெனக் கேட்ட நாயக போற்றி
மின்னிடி மழையிற்செந்நெல் கொணர்ந்துண
வளித்த மாறற் கருளினை போற்றி
பொய்வே டத்தில் மெய்யது கண்ட
மெய்ப்பொருட் குற்ற மெய்ப்பொருள் போற்றி
தொண்டத் தொகைசொலக் கண்டவிறல் சேர்
மிண்டர்க் கருளிருட் கண்டனே போற்றி
கோவணம் மறைத்தமர் நீதியைச்* குழப்பிய
பூவண நாத புராதன போற்றி
அடியரைக் காப்ப தருகட னெனக்கொள்
அவ்வெறி பத்தர்க் கருந்துணை போற்றி (7)
நீற்றின் பெருமை நினைந்துயி ரிழந்த
ஏனாதி நாதர்க் கிறைவ போற்றி
கண்ணிடந் தப்பின கண்ணப் பர்க்கருள்
புண்ணிய முதல்வ புராண போற்றி
கலயற் கருள்புரி தலைவ போற்றி
மானக்கஞ் சாறர் பானற்கண் மகளின்
கூந்தலை விழைந்த ஏந்தலே போற்றி
தாயனார்க் கருள்புரி தூயனே போற்றி
ஆனாயர் குழலிசைக் கருளிணை போற்றி
சந்தனத் தொண்டுசெய் சிந்தனை மிக்க
மூர்த்திக் கருள்புரி தீர்த்தனே போற்றி (14)
மாலை புனைந்து மகிழ்ந்து பணிந்த
முருகனுக் குகந்த மூர்த்தி போற்றி
உருத்திர பசுபதி உறுஜெபத் திறங்கண்
டருத்தியோ டவர்க்கருள் ஒருத்தனே போற்றி
நாளைப் போவார் நற்றிறங் கண்டு
தில்லைக் கழைத்த சிட்டனே போற்றி
தொண்டர் குறிப்பறி தொண்டரை யாண்ட
தொண்டர் நாதநின் துணையடி போற்றி
தாதைதாள் அறஎறி சண்டே சர்க்கருள்
நீதிசேர் நிமலநின் நிரைகழல் போற்றி
ஒப்பிலா அப்பர்க் குறுதுணை போற்றி
குலச்சிறை தவமகிழ் குழகனே போற்றி (21)

சுந்தரர் நாமம் தூமனத் துற்ற
மிழலைக் குறும்பர் விழைமுதல் போற்றி
மாம்பழங் கொண்ட மாதவச் செல்வி
பேயுரு அம்மையைப் பேணினை போற்றி
நாவுக் கரசின் நாமம் போற்றின
அப்பூ திக்கருள் அப்பனே போற்றி
நலந்திகழ் நீல நக்கர்க் கன்று
சிலந்தியைப் போக்கின சீர்மையை விளக்கின
*நலந்தி நிறத்து நாதனே போற்றி

-----------

*நல் அந்தி நிறம்
எரியகல் நீர்கொண் டேற்றின மாத்திறல்
நமிநந் திக்கருள் நற்றவ போற்றி
எங்குலத் தெய்வம் எம்பிரான் பந்தன்
இசைத்தமிழ் நாடிய இறைவனே போற்றி
ஏயர்கோன் உற்ற இரும்பிணி நீக்க
நம்பியை அனுப்பிய நம்பனே போற்றி (28)
திருமந் திரநூல் செப்பிய மூலரின்
முன்னுடல் மறைத்த மூலனே போற்றி
கண்ணிலாத் தண்டி கண்பெற அருளிய
புண்ணிய பூத புராணனே போற்றி
சூதாட் டப்பொருள் தொல்லடி யார்க்கே
ஊக்கத் துடனளி மூர்க்கற் கருள்புரி
பரம யோகியெம் பரஞ்சுடர் போற்றி
ஆரூரர் நண்பர் சோமாசி அன்பர்க்
காடல் காட்டிய ஏடக போற்றி
சாக்கியர்க் கருள்புரி தீக்கர போற்றி
சிறப்புலிக் கருளின சிறப்பினை போற்றி
சிறுத்தொண்டர்க்கருள் செயவிழைந் தன்று
பிளைக்கறி பேணின பெரும போற்றி (35)
சேரமான் பூசைச் சிறப்பினை மகிழ்ந்து
வாரமாச் சிலம்பொலி வழங்கினை போற்றி
காழி வேந்தன் கழலிணை போற்றிய
கணநா தர்க்கருள் கண்மணி போற்றி
மாற்றலர் அஞ்சும் கூற்றுவர்க் கன்று
திருவடி சூட்டி ஆட்சிசெய அருள்
பொங்கழல் உருவநின் பூங்கழல் போற்றி
சடையின் பெருமை தன்னகங் கொண்ட
புகழ்ச்சோ ழற்கருள் புனித போற்றி
தூர்த்தனீ றணிந்திடில் தீர்த்தனே என்று

பார்க்கும்ஞா னத்துடன் பணிநர சிங்க
முனையர்க் கருள்புரி முன்னவ போற்றி
நவரத்ன மீனும் நாதற் கெனும்அதி
பத்தர்க் கருள்புரி வித்தக போற்றி
இவ்வடி யான்முனம் ஏவலா ளன்னெனும்

நினைவுகூ டாதென மனைவிகைத் தடிந்த
கலிக்கம் பற்கருள் கண்ணுதல் போற்றி (42)
எண்ணெ யிலாமையால் என்கழுத் தையரிந்
திரத்தம் பெய்திங் கேற்றுவன் தீபம்
எனத்துணிந் தெழுந்த கலியற் கிரங்கும்

எந்தை யீசன் எம்பிரான் போற்றி
சிவனடி யவரைச் செற்றிகழ் வோர்தம்
நாவை யறுக்கும் நற்றிறச் சத்தி
அடிகளுக் கருளும் ஆத்தனே போற்றி
சிவஸ்தலங் களுக்குச் சீரார் பெருமைப்

பண்பார் வெண்பாப் பாடிய காடவர்
கோனுக் கருள்புரி கோமான் போற்றி
முடியைத் தீபமா முன்னவற் கெரித்த
சுணம்புல் லர்க்கருள் கர்த்தனே போற்றி
பாடிய பரிசிலைப் பரன்பணிக் காக்கும்

காரிக் கருள்புரி கண்ணுதல் போற்றி
காழிப் பெருமான் கருணை யதனால்
திருநீ றணிந்த சீர்செடு மாறன்
உய்ய அருளிய உத்தம போற்றி
கோயிலா மனத்தைக் குறிநிய மத்தர்

வாயிலார்க் கருளும் வள்ளலே போற்றி (49)
போர்முனை வென்ற பொருளடி யார்க்கங்
கீந்து மகிழ்ந்த இதயத் திறங்கொள்
முனையடு வார்க்கருள் முதல்வ போற்றி
பூசைக் குரிய பூஎடுத் தாளெனக்

காதலி கரந்தெறி கழற்சிங் கற்கருள்
பூத புராணநின் பொற் கழல் போற்றி
சிவனடி யார்க்கெனச் செல்வ மனைத்தும்
கொள்ளை கொளவிடு குணப்பெருஞ் செல்வர்
இடங்கழி யார்க்கருள் விடங்க போற்றி

பூசைக் குரிய பூவைமோந் தாளெனக்
காரிகை துண்டந் துண்டங் கண்ட
செருத்துணைக் கருள்புரி செல்வா போற்றி
பூசைசெய் புகழ்த்துணைக் குறுபசி போக்கக்
காசது நல்கிய கடவுள் போற்றி

அடியவர்க் குரியநெல் லதையெடுத் தாரென
எடுத்தவர் தம்மை வாள்கொண் டெறிந்த
கோட்புலிக் கருள்புரி குணமணி போற்றி
மனக்கணே கோயில் வகுத்த பெருமான்
பூசலார்க் கருள்புரி புண்ணிய போற்றி (56)

சிவநெறி போற்றிய தெய்வப் பாவை
மங்கையர்க் கரசி மகிழ்தர உதவிய
கற்பகக் கனியெங் கண்ணுதல் போற்றி
சாலியர் நேசர் தம்பணி யுகந்த
மேலவர் மேலவ மெய்ப்பொருள் போற்றி

சிலம்பியாப் பந்தர் சிவபிராற் கமைத்த
கோச்செங் கணாற்கருள் கொற்றவ போற்றி
காழியர் பாடலை யாழினி லிட்ட
பாணற் கருள்புரி தாணுவே போற்றி
நம்பியா ரூரரை நலம்பெறப் பெற்ற

சடையற் கருள்புரி சடையாய் போற்றி
நம்பியா ரூரரின் நற்றாய் எனவரும்
இசைஞா னிக்கருள் ஈசனே போற்றி
தொண்டத் தொகைதரு தொண்டர்க் கதிபன்
சுந்தரன் தோழநின் சுடர்த்தாள் போற்றி (63)

9. தொகையடியார்கள்:

தில்லை யந்தணர் நல்லகத் திலங்கும்
கூத்தமர் பெருமநின் குரைகழல் போற்றி
பொய்யடி மையிலாப் புலவர்க் கருள்புரி
மெய்யனே போற்றி விமலனே போற்றி
பத்தராய்ப் பணிவார் சித்தத் துறையும்

அத்தனே போற்றி அருத்தனே போற்றி
பரமனைப் பாடும் பண்பினர்க் கருளும்
கத்தனே போற்றி கருத்தனே போற்றி
சித்தம் சிவன்பாற்சேர் த்தவர்க் கருள்புரி
சித்தனே போற்றி திருத்தனே போற்றி

ஆரூர்ப் பிறந்தார் அவர்பிற வா அருள்
பாலித் தருளும் பரனே போற்றி
திருமேனி தீண்டும் பெரும்பேறு பெற்றோர்க்
கருள்புரி குருபர அரஹர போற்றி
முழுநீறு பூசும் முநிவர்க் கருள்புரி

விழுமிய கொள்கை விழுப்பொருள் போற்றி

அப்பா லும்மடிச் சாரும் அடியார்க்
கருள்புரி கருணைய அரஹர போற்றி (9)

10. பிற அடியார்கள்:

மணிவா சகரருள் மணிவா சகங்களை
எழுதி மகிழ்ந்த எழிலே போற்றி
இசைப்பா பாடிய இசைப்புல வர்க்கருள்
திசைப்பார் போற்றும் தீர்த்தனே போற்றி
வகைப்படத் தொண்டத் தொகைவிரி நம்பி
யாண்டார் நம்பியை யாண்டவ போற்றி
மறுவற்ற பத்தி அறுபத்து மூவர்
அவர்சரி தஞ்சொலும் ஆரரு ளாளர்
சேக்கிழார்க் கருள்புரி தேவே போற்றி
பட்டினத்தார் தொழு பட்டனே போற்றி
சாத்திரஞ் சொன்ன சந்தான குரவர்க்
கொருகுரு எனத்திகழ் ஒருத்தனே போற்றி
தாயுமா னவர்க்கருள் தந்தையே போற்றி
குமர னருள்பெறு குமர குருபரர்
சிவப்பிர காசர் சிவஞான முநிவர்
ஆதிய அடியார்க் கருளினை போற்றி
கண்டிகை நீறணி கருத்தினர்க் கருளும்
அண்ட வாணநின் அடியிணை போற்றி
சிவாய நமஎனச் சிந்திப் பவர்க்கோர்
அபாயம் இலாவகை அருள்வாய் போற்றி
எப்பரி சேத்தினும் அப்பரி சேநின்
றருள் புரி பரசிவ அற்புத போற்றி.

11. திருக்கோலக் காட்சி:

ஆணொடு பெண்வடி வாயினை போற்றி
மடப்பா வைக்கன் றிடப்பா கந்தரு
சடைப்பாற் பிறையணி சங்கர போற்றி
கயமுக னைத்தெறு கரிமுக னைத்தரு
வயவ போற்றி வரத போற்றி
மாயச் சூரை வீய வைத்த
அத்தனைத் தந்த தத்துவ போற்றி
இடபம தேறும் எந்தாய் போற்றி
சேவார் வெல்கொடித் தேவே போற்றி

கட்டங் கக்கொடி காட்டினை போற்றி

சூலக் கரத்துச் சுந்தர போற்றி 345
மாண்டா ரெலும்பணி மன்னவ போற்றி
புரிநூல் மார்பிற் பூண்டனை போற்றி
தீவண மேனிப் பூவண போற்றி
மின்னிகர் சடைமுடி விண்ணவ போற்றி

மானுரி கரியுரி மகிழ்ந்தனை போற்றி 350
தேளணி செஞ்சடைத் தேசிக போற்றி
கண்டி பூணுங் கருத்த போற்றி
தூயவெண் ணீறு துதைந்தனை போற்றி
தலையணி மாலை தரித்தனை போற்றி

வானம ருஞ்சடை வானவ போற்றி 355
கொன்றையுங் குரவுங் கோடலும் ஆத்தியும்
வன்னியும் தும்பையும் மத்தமும் எருக்கும்
கரந்தையும் பூளையும் கமலமும் கோங்கும்
வில்வமும் நொச்சியும் விரும்பினை போற்றி

12. இருபத்தைந்து வடிவு:

வரோதய மூர்த்தியாய் வயங்கினை போற்றி 360
சுகாசன மூர்த்தியாய்த் துலங்கினை போற்றி
சுப கலியாண* சுந்தர போற்றி
உமாம கேசுர உத்தம போற்றி
கிரீச மூர்த்தியாம் கேடிலி போற்றி

சோமாஸ் கந்தராம் தூயவ போற்றி 365
சக்கர தான சதுரனே போற்றி
த்ரிமூர்த்தி யாமெந் தேவே போற்றி
ஹரிஹர மூர்த்தியே ஹரஹர போற்றி

தக்ஷிணா மூர்த்தியாம் தத்துவ போற்றி (10)

பிக்ஷா டனராம் பெரும போற்றி 370
கங்கா ளன்னெனும் கடவுள் போற்றி
காமசங் கார கண்ணுதல் போற்றி
காலசங் கார கழலாய் போற்றி

சலந்த ராசுர சங்கார போற்றி (15)

முப்பு ராரியாம் மூர்த்தி போற்றி 375
சரப மூர்த்தியாம் சங்கர போற்றி
நீல கண்டராம் நித்திய போற்றி

த்ரிபாத மூர்த்தியாம் தீர்த்த போற்றி (20)

ஏக பாத இறைவ போற்றி
வயிரவ மூர்த்தியாம் வானவ போற்றி
இடபா ரூடராம் எம்மான் போற்றி
சந்திர சேகர தற்பர போற்றி
நடன மூர்த்தியாம் நாத போற்றி
கங்கா தரராம் கற்பக போற்றி. (25)

13. பிற வடிவுகள்:

இலிங்க ரூபத் திலகினை போற்றி
பாதியோர் மாதர் மாலுமோர் பாகர்
எனத்திகழ் வனப்புறும் இனித்தனே போற்றி
ஓங்கா ரத்துள் நீங்காய் போற்றி

14. தலவாசம்:

பஞ்சபூ தத்தலம் பதிகளாக் கொண்ட
மஞ்சனே போற்றி மணாளனே போற்றி
ஆரூர் ஆனைக் காவுடன் அழகார்
அண்ணா மலைகா ளத்தி சிதம்பரம்
காசி ஆலவாய் ஏசிலா தார
யோகத் தலங்களிற் போகனே போற்றி
கஞ்ச னாதியர் கைதொழு தேத்தப்
பஞ்ச சபைகளிற் பண்பார் வகையில்
நட்ட மாடுஞ் சிட்டனே போற்றி
ஆரூர் ஆதிய ஏழு தலங்களில்
நடங் குலா வித்திகழ் விடங்கனே போற்றி
கயிலை மலைவாழ் கண்ணுதல் போற்றி
வடநாட் டிலகுறு வளமார் பதிகள்
ஐந்தினிற் றிகழும் மைந்தனே போற்றி
துளுவநா டதனில் துலங்குகோ கர்ணத்
திலங்கிடு நாதநின் பொலன் கழல் போற்றி
தொண்டை நாடதனிற் பண்டை நாள் முதலா
நலத்த எண் ணான்கு தலத்தனே போற்றி
இருபத் திரண்டெனும் இருப்பிடம் கொண்டு
நடுநாட் டிலகு நாயக போற்றி
கொங்கெழு பதிகளிற் புங்கவ போற்றி
மலைநாட் டொருபதி வாழ்வாய் போற்றி
இரண்டெழு பதிகள் இருப்பிடங் கொண்டு

பாண்டி நாட் டிலகும் ஆண்டவ போற்றி
ஈழத் திரண்டு வாழ்தற் கினிய
தலமெனக் கொண்ட தலைமைய போற்றி

காவிரி வடகரை காண்டகு தலங்கள்
ஏழொன் பதிலும் இலகினை போற்றி
காவிரித் தென்கரை கவினுறு தலங்கள்
இருபதும் நூறும் ஏழும் ஆனவை
இனிதாக் கொண்ட புனிதா போற்றி.

--------------

குக்கா; குரங்கணின் முட்டம், (23) சிறுகுடி (24) சீகாளத்தி, திரு ஆனைக்கா.

15. வழிபட்டோர்:

1விண்ணவர் 2தானவர் 3மண்ணவ ரானோர்
பண்ணிய பூசனை பரிந்தனை போற்றி

4அணிலும் 5ஆமையும் 6ஆனையும் 7 காகமும்

8பசுவும் 9பாம்பும் 10பன்றியுங் 11குதிரையும்

12நண்டும் 13வண்டும் 14நாரையும் 15கழுகும்

16குயிலும் 17மயிலும் 18முயலுங் 19குருவியும்

20ஈயும் 21எறும்பும் 22குரங்கும் 23கருடனும்

24சிலந்தியும் பூசைசெய் சிற்பர போற்றி.

16. வேதமும் சிவனும்:

சாமவே தப்ரிய சங்கர போற்றி
வேதம் பாடும் விகிர்தா போற்றி

வேதம் போற்றும் பாத போற்றி
வேதமுடிதிகழ் நாத போற்றி
வேத பீடிகை மேலோய் போற்றி
வேத பாதுகை வேந்தே போற்றி
வேத வாரண மேலோய் போற்றி.

வேத நூபுர விண்ணவ போற்றி
வேதஞ் சரடா வேய்ந்தனை போற்றி
வேதக் கோவண வேதிய போற்றி
வேதமே விழியாய் விளங்குவை போற்றி
வேதமே மொழியா விளம்புவை போற்றி

வேதமே வடிவா விரும்பினை போற்றி

வேதச் செங்கோல் மெய்யனே போற்றி
வேத ஆணைய விதியனே போற்றி
வேதம் நான்கும் தேர்ப்பரி யாகவும்
வேதம் பந்தல் நாற்கால் ஆகவும்
போத அமைத்த பூதிய போற்றி

17. பரம் பொருள்

பதுமனாய் நின்று படைப்பாய் போற்றி
அரியாய் நின்றங் களிப்பாய் போற்றி
அரனாய் நின்றங் கழிப்பாய் போற்றி
மூவர்கோ எனத்திகழ் தேவர்கோ போற்றி
பந்தமும் வீடும் படைப்போன் போற்றி
பஞ்சபூ தங்களிற் பரந்தனை போற்றி
அட்ட மூர்த்தியாய் அமர்ந்தனை போற்றி
ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல்
அனுக்கிர கித்தலென் றைவகைச் செயல்புரி
ஆற்ற லமைந்த அதிபனே போற்றி
பிறப்பிறப் பில்லாப் பெரியவ போற்றி
"பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்த சொன் மாலை கொண்டருள் போற்றி
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி".
திருச்சிற்றம்பலம்

------------

*திருவாசகம்-போற்றித்திருவகவல்

-----------------------------------------------------------

(1) தேவர் பூசித்தது-திருக்காட்டுப்பள்ளி (கீழை, கோட்டூர் முதலிய

(2) அசுரர் பூசித்தன இடும்பாவனம், திரிசிராப்பள்ளி முதலிய

(3) மண்ணவர் அரசர் பூசித்தன திருவாரூர், திரு விடை மருதூர் முதலிய

(4-24) அணில் முதல் சிலந்திவரை பூசித்த தலங்கள் முறையே

(4) குரங்கணில் முட்டம் (5) திரு மணஞ்சேரி

(6) திரு ஆனைக்கா, காளத்தி, கோட்டாறு, பெண்ணாகடம்

(7) குரங்கணில் முட்டம் (8) திரு ஆமாத்தூர், ஆவூர், பெண்ணாகடம், ஆவடுதுறை

(9) காளத்தி, பாம்புரம், நாகைக்காரோணம், திருநாகேச்சுரம், கும்பகோணம் நாகேசுர சாமிகோயில், பாதாளீச்சுரம்

(10) சிவபுரம் (11) அயவந்தி- சாத்த மங்கை (12) திருந்து தேவன்குடி, திரு நீடூர்

(13) திருவெண்டுறை (14) திரு நாரையூர், மதுரை

(15) திருக்கழுக்குன்றம், புள்ளிருக்கு வேளூர் (16) திருக்கோழம்பம்

(17) மயிலாப்பூர், மயிலாடுதுறை (மாயூரம்) (18) திருப்பாதிரிப்புலியூர்

(19) மதுரை வலிவலம் (20) ஈங்கோய்மலை (21) திரு எறும்பியூர்

(22) குரங்காடு துறை- தென் வட ; குரக்குக்கா; குரங்கணின் முட்டம்

(23) சிறுகுடி (24) சீகாளத்தி, திரு ஆனைக்கா.

**நூல் வரலாறும் வாழ்த்தும்**

போற்றி அகவல் புகலென் றெனக்கொர்பணி
சாற்றிய தம்பிபல சந்தஞ்சொல் - ஆற்றல் நிறை
ஆறு முகனெந்தை ஆறு முகனருளால்
வீறுடனே வாழ்கபுவி மேல்.

வாழ்க இந் நூலை வழங்க உதவினவர்
வாழ்கமயில் வேல்சேவல் மாதிருவர் - வாழ்கவே
செல்லாருந் தென்கணிகைச் சேயோன் அடியார்கள்
எல்லாரும் வாழ்க இனிது.

----------------------